සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**15 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2009 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2009

ක්‍රිස්තු ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

පැ තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

## கிறிஸ்தவம் I

கவனிக்க :

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை ( X ) இடுக.

(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

(v) **I ஆம் II ஆம் விடைத்தாள்களை ஒன்றாகக் கட்டிக் கையளிக்க.**

1. திருமுழுக்கு யோவான் தரும் போதனையின்படி சமுதாயச் சீரழிவு நிகழும்போது
   (1) சமுதாயத்தைப்பற்றி இறைவாக்கு உரைக்க வேண்டும்.
   (2) சமுதாயத்தில் வீரராகப் புகழ்பெற்றவர்களின் பங்களிப்பைப் பற்றி விளக்க வேண்டும்.
   (3) சமுதாய மாற்றத்திற்காகச் செயற்பட வேண்டும்.
   (4) சமுதாயத்தில் மேல் மட்டத்தில் உள்ளோரை விமர்சிக்க வேண்டும்.

2. மரியாள், எலிசபெத்து என்போரின் முன்னுதாரணத்தின்படி
   (1) கடவுளில் முற்றாக நம்பிக்கைகொண்டு தைரியமாகச் செயற்பட வேண்டும்.
   (2) சமுதாயத் தடைகள் அனைத்தையும் ஒதுக்கிவிட வேண்டும்.
   (3) கேள்வியுறும் அனைத்துச் செய்திகளுக்கும் பிரதியுத்தரம் அளிக்க வேண்டும்.
   (4) இறைவனின் சித்தம் நிறைவேறும்வரை அமைதியாக இருக்க வேண்டும்.

3. கிறிஸ்மஸ் பண்டிகைக்கால நாடகம் ஒன்றிற்கு நன்மை பயக்கும் தலைப்புகள்
   A - கிறிஸ்மஸ் பண்டிகை ஒரு தினத்திற்கு மட்டும் உரியதன்று
   B - குழந்தை இயேசுவை மூன்று ஞானிகள் வழிபடுகின்றனர்
   C - கிறிஸ்மஸ் பண்டிகை சிறுவர்களுக்கு மட்டும் உரித்தானது.
   D - நமது உள்ளங்கள் கிறிஸ்துவின் வதிவிடமாக வேண்டும்.
   இவ்வற்றில் சரியான விடைகள்
   (1) A, B  (2) B, C  (3) C, D  (4) A, D

4. நமது வாழ்வை முற்றிலும் மாற்றிக்கொள்வதற்கென சக்கேயு மனந்திரும்பிய அனுபவத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் மிகச் சிறந்த முன்மாதிரி
   (1) தனது அரைப்பங்கு சொத்தை ஏழைகளுக்கு வழங்குதல்
   (2) தசமபாகம் செலுத்துதல்
   (3) பிறரை ஏமாற்றாமை
   (4) இறையன்பை புதிய வழிகளில் அனுபவித்தல்

5. காணாமற்போன மகன்/ கெட்ட குமாரன் உவமைக் கதையின் படி நாம் அதிக அழுத்தம் கொடுக்க வேண்டியது
   (1) பிறர் எல்லையற்ற அன்பையும் தாராள மனப்பான்மையையும் அனுபவிக்கச் செய்தல்
   (2) சிந்தித்துச் செயற்படுதல்
   (3) தமக்குரிய சுதந்திரத்தைத் தாம் விரும்பியபடி பயன்படுத்துதல்
   (4) வழிதவறிச் சென்றோருக்கு உதவுவதற்கு வேண்டிய வழிமுறைகளை ஏற்படுத்துதல்

[பக். 2 ஐப் பார்க்க

6. "கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்!" என்ற நற்செய்தியை எடுத்துக் கூறுபவர்
   (1) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.
   (2) தூய ஆவியானவரின் செயற்பாடுகளை எதிர்பார்த்திருக்க வேண்டும்.
   (3) சமுதாய மாற்றங்களில் நம்பிக்கையுடையவராய் அதற்கென உழைக்க வேண்டும்.
   (4) சிலுவையின் பணியாளராக வேண்டும்.

7. நீங்கள் பெற்றுள்ள திருமுழுக்கு உமது வாழ்வில் அர்த்தமுள்ளதாவது
   (1) நீங்கள் ஓய்வுநாள் பாடசாலையில் அதிக ஈடுபாடு கொள்ளும் போதாகும்.
   (2) நீங்கள் ஒரு புதிய வாழ்வு முறையை ஏற்கத் தயாராகும் போதாகும்.
   (3) தூய ஆவியானவரின் வல்லமை உங்கள் வாழ்வை மேற்கொள்ளும் போதாகும்.
   (4) மனந்திரும்பிய வாழ்வை மேற்கொள்ளும் போதாகும்.

8. தேவாலயத்தில் தங்கியிருந்த சிறுவன் இயேசுவின் வாழ்விலிருந்து பெறும் முன்னுதாரணம்
   (1) எமது ஆசிரியர்களுடன் முரண்பட்டு பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டும்.
   (2) திருவிழாக்கள் முடிந்த பின்னரும் ஆலயத்தில் தங்கியிருக்க வேண்டும்.
   (3) நாம் கிறிஸ்தவப் பொறுப்புகளைப் புரிந்துகொண்டு, அவற்றின்படிச் செயற்பட வேண்டும்.
   (4) இறைபணிக்கு முன்னுரிமை கொடுத்தல் வேண்டும்.

9. (i) ஆம் பிரிவிற்குப் பொருத்தமான விடை (ii) ஆம் பிரிவில் காணப்படுவது:

| பிரிவு (i) | பிரிவு (ii) |
|---|---|
| நற்செய்திப் பணி நாம் எதிர்பார்க்கும் பெறுபேறைத் தராமைக்கான காரணம் | (A) கடவுளுக்கான மகிமையை நாம் பெற்றுக்கொள்ள முயற்சித்தல்<br>(B) நாம் ஆடுகளைப் போல் செயற்படாமை<br>(C) நமது தொடர்பாடல் முறைகள் குறைவுள்ளன.<br>(D) உலகப் பற்று முதலிடம் பெறுகின்றமை. |

   (1) A  (2) (B)  (3) C  (4) D

10. 'நீர் கடவுளின் மெசியா' என்ற பேதுருவின் அறிக்கையிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் கிறிஸ்தவ அனுபவம்
   (1) நமக்குத் தேவையான அனைத்தையும் உடனே தரும் கடவுள் பற்றியாகும்.
   (2) நமது எதிரிகளைத் தண்டிக்கும் கடவுள் பற்றியாகும்.
   (3) அற்புதச் செயல்களின் மூலம் மட்டுமே நம்மைச் சந்திக்கும் கடவுள் பற்றியாகும்.
   (4) நம்மை எப்போதும் தாங்கியிருக்கும் கடவுள் பற்றியாகும்.

11. யூத மறைநூல் அறிஞர்களின் கருத்துக்களை இயேசு ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறு இயேசு ஏற்றுக் கொள்ளாத ஒரு செயல்
   (1) பலரும் அறிந்துகொள்ளும் வண்ணம் சிலருக்கு உணவு வழங்குதல்
   (2) சட்டங்களைக் கடைப்பிடிப்பதனைப் பார்க்கிலும் ஏழைகளின் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தல்
   (3) பழைய நினைவுச் சின்னங்களைத் தகர்த்தெறிதல்
   (4) விழாக்களின்போது தானே முக்கியத்துவம் பெற்றுக் கொள்ளல்

12.

| இயேசு சந்தித்த ஒரு சோதனை | | |
|---|---|---|
| சோதனை | இன்றைய நிலை | இவ்வாறான சோதனைகளின் மத்தியில் கிறிஸ்தவ மாறுத்தரம் |
| தீமையானவற்றை வழிபடுதல் | செல்வத்தையும் அதிகாரத்தையும் வழிபடுதல் | A - செல்வத்தையும் அதிகாரத்தையும் விட்டு வறுமைநிலை வாழ்வை மேற்கொள்ளுதல்<br>B - இறைவனுக்குப் பணிந்து சோதனைகளை மேற்கொள்ளுதல்<br>C - சோதனைகளைச் சந்திப்பது இறைசித்தம் என்று ஏற்றுக் கொள்வது<br>D - செல்வத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி சோதனைகளை மேற்கொள்ளல் |

இவ் அட்டவணையின்படி மிகச் சரியான மாறுத்தரம்
   (1) A  (2) B  (3) C  (4) D

13. இன்று நாம் சந்திக்கும் அறைகூவல்களைச்/ சவால்களைச் சந்திப்பதற்குத் தொடக்ககால ஆதித் திருச்சபை தரும் வழிநடத்துதல்
   (1) மரியாதை வழங்க வேண்டியபோது அதனை வழங்குதல்
   (2) தசமபாகம் கொடுப்பதன் மூலம் திருச்சபையைப் பெலப்படுத்துதல்
   (3) தனிமுதல் போக்கு நிலையைவிட்டு பிறரை உள்ளடக்கிக்கொள்ளும் நிலையைக் கடைப்பிடித்தல்
   (4) செபத்தின் வல்லமையின் அடிப்படையில் செயற்படல்

[பக். 3 ஐப் பார்க்க

14. இயேசுவானவர் ஒரு முறை எருசலேமிற்காக கதறி அழுதார். இன்று அவர் இலங்கையின் பெயரில் மகிழச்சியுற வேண்டுமெனில்
   (1) நம்மை எதிர்க்கும் அனைவரையும் ஒதுக்கிவிட வேண்டும்.
   (2) சமுதாயத் தீமைகளை விமர்சித்தலை விட்டுவிட வேண்டும்.
   (3) நீதியான சமுதாயத்தை நோக்கிச் செயற்படுவதற்காக நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.
   (4) பொருளாதார அபிவிருத்திக்கென திட்டம் வகுக்க வேண்டும்.

15. கிறிஸ்மஸ் பண்டிகை நாட்களில் நடைபெறும் சில செயல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A - பல மாதிரிகைகளில் புத்தாடைகள் கடைகளில் நிறைந்து காணப்படுகின்றன.
   B - மதுபான விற்பனை நிலையங்களில் மக்கள் குவிந்து காணப்படுகின்றனர்.
   C - மிக ஆடம்பரமான விருந்துபசாரங்கள் இடம்பெறுகின்றன.
   D - ஆலயங்களில் பக்திப் பாடல்கள் ஒலிக்கின்றன.
   செல்வரும் இலாசருவும் பற்றிய கதையின்படி புதிய கருத்தைக் கொடுக்கும்நோக்கில் நாம் மாற்றியமைக்க வேண்டியவை
   (1) A, B (2) B, C (3) C, D (4) A, D

16. பல துக்கமான நிகழ்வுகள், பிரச்சினைகளின் மத்தியில் கிறிஸ்தவ இளைஞரான நீர்
   (1) ஆறுதல் தரும் இடங்களில் அடைக்கலம் பெற வேண்டும்.
   (2) இவ்வாழ்விலிருந்து விடுபடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.
   (3) துன்ப துயரங்களின் மத்தியிலும் வாழ்வைத் துணிவுடன் சந்திக்க வேண்டும்.
   (4) துன்பம் ஏற்படுவது இயல்பெனக்கொண்டு ஆறுதல் அடைய வேண்டும்.

17. "தனது சொந்தக் குழந்தையை இன்னொருவரிடம் கூறி கொலை செய்வித்த தாய் கைது செய்யப்பட்டார்." இவ்வாறான செய்திகளை நாம் கேள்விப்படுவதற்கான காரணம்
   (1) தியாக அன்பு இல்லாது போய்விட்டமை
   (2) தன்னிச்சை கருதும் பொதுமக்கள் அபிப்பிராயத்துடன் மக்கள் வாரிச்செல்லப்படுகின்றமை
   (3) பெற்றோர் பொறுப்பற்றவர்களாகி விட்டமை
   (4) மனித வர்க்கம் மேலும் மேலும் வன்முறைகள் நிறைந்ததாகியுள்ளமை

18. பிலிப்பி நகரில் பவுல் எதிர்கொண்ட சவால்களை நோக்கும்போது நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியது
   (1) சரியானதைத் தெரிவுசெய்யும்போது பிழையானதை விலக்கிவிட வேண்டும்.
   (2) சரியானவற்றையும் பிழையானவற்றையும் அறிந்து கொள்வது சிரமமானது.
   (3) சமுதாய தீச்செயல்களுக்கு பாராமுகம் காட்டுவது நல்லது.
   (4) பெரும்பான்மையோர் தெரிவை ஏற்றுக்கொள்வது சரியானது.

19. சமுதாயப் பணியில் ஈடுபடும்போது அதன் இன்றைய தேவைகளைக் கருத்திற்கொண்டு இலங்கை வாழ் கிறிஸ்தவர் முதலிடம் கொடுக்க வேண்டியது
   (1) இடம்பெயர்ந்துள்ள மக்களின் மேம்பாட்டிற்காக உழைக்க வேண்டும்.
   (2) இடம்பெயர்ந்தோர் மத்தியில் திருவிவிலியப் பகுதி துண்டுப்பிரசுரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.
   (3) தெரு வீதிகளில் வாழும் பிள்ளைகளின் திறமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
   (4) முதியோருக்கான இல்லம் நிறுவ வேண்டும்.

20. பவுலின் செயற்பாடுகளின்படி இன்று திருத்தூதுப் பணி செய்வதற்கு நாம்
   (1) பிறரின் நலனைக் கருத்திற்கொண்டு சிறந்த ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
   (2) முறையான தரிசனத்துடன் முன்னிருக்கும் பிரச்சினைக்கு மாறுத்தரம் அளிக்க வேண்டும்.
   (3) உடனடி பெறுபேறுகளை எதிர்நோக்கி கணப்பொழுதில் செயல்களில் ஈடுபட வேண்டும்.
   (4) முரண்பாடுகளைத் தீர்த்தலுடன் சேர்த்து திருப்பணி செய்தல் வேண்டும்.

21. பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலைபெறுவதனை ஊக்குவிக்கும் மெசியா நமக்குத் தரும் ஒளியானது
   (1) இறைவாக்கினரை நோக்குதல் (2) முற்றான விடுதலை பெறுதல்
   (3) விடுதலைக்கான போராட்டம் (4) பாவக்கட்டுக்களை அகற்றுதல்

22. ஒரு யூத இறைவாக்கினர் இன்று இலங்கை வருவாரெனில் அவர் முன்வைக்கும் முக்கிய பெறுமதி/ விழுமியம் ஆவது
   (1) ஒருவரின் வாழ்வும் சமயமும் தொடர்புடையதாய் இருத்தல் வேண்டும்.
   (2) பரம்பரைப் பாரம்பரியங்களின்படி நிலம் பகிர்ந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.
   (3) கூட்டுக் குடும்ப வாழ்வு முக்கியப்படுத்தப்பட வேண்டும்.
   (4) தகப்பன் வழி மரபு பாரம்பரியம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

23. பிலாத்து இயேசுவுக்களித்த மரண தண்டனையைக் கண்டிக்கும்போது ஒரு கிறிஸ்தவன்
   (1) நீதி நியாயம் என்பவற்றைத் தெளிவாக விளக்க வேண்டும்.
   (2) நீதி நியாயம் ஏன் புறக்கணிக்கப்பட்டனவென கண்டறிய வேண்டும்.
   (3) நீதி நியாயம் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை வெளிக்கொணர வேண்டும்.
   (4) நீதி நியாயத்தை நிலைநாட்டுவதில் தன் சுய நன்மைகளைப் பற்றி எண்ணாதிருத்தல் வேண்டும்.

[பக். 4 ஐப் பார்க்க

24.

| கிறிஸ்தவ குடும்பம் பற்றிய கொள்கை | |
|---|---|
| வினா | நான்கு பேர் கூறிய விடைகள் |
| கிறிஸ்தவ சகோதரத்துவத்தை வெளிப்படுத்த நீர் என்ன செய்தீர் ? | A - என் சகோதரரில் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தினேன்.<br>B - இடம்பெயர்ந்த இருவரை என் வீட்டில் ஏற்றுக்கொண்டேன்.<br>C - எனது சொந்த சகோதரரின் நலனுக்காகப் பாடுபட்டேன்.<br>D - கிறிஸ்தவ சகோதரத்துவம் பற்றிய கலந்துரையாடலில் பங்கு கொண்டேன். |

கிறிஸ்தவ அன்பு சிறப்பாக வெளியிடப்படுவது

(1) A (2) B (3) C (4) D

25. "சீசருடையவற்றை சீசருக்கும் (இராயன்) கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்." இதன்படி இன்று ஒரு கிறிஸ்தவனின் முக்கிய பொறுப்பு
(1) அரசுக்கும் திருச்சபைத் தலைவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடத்தல் ஆகும்.
(2) அரச சேவையில் ஈடுபட்டுள்ளபோதும் திருச்சபையில் பதவி வகித்தல் ஆகும்.
(3) அரசுக்கும் திருச்சபைக்கும் ஒருவர் தனது கடமைகளையும் பொறுப்புகளையும் செய்தல் ஆகும்.
(4) திருச்சபைக்குக் காணிக்கை வழங்காவிட்டாலும் அரசுக்குரிய வரிகளைச் செலுத்துதல் ஆகும்.

26.

| வறுமையின் மத்தியில் | |
|---|---|
| கிறிஸ்தவப் பொறுப்பு | கிறிஸ்தவக் கடமை |
| வறுமை ஒழித்தல் | A - வளங்களைச் சமமாகப் பகிர்ந்து கொடுத்தலில் முன் நிற்றல்<br>B - ஒருவரின் முழுச் சொத்தையும் ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தல்<br>C - சமாதானம் நிறைந்த சூழலை உருவாக்குதல்<br>D - தொழிலாளவர்க்கச் சுரண்டலைக் கண்டித்தல் |

இவற்றின்படி முதலிடம் கொடுக்கப்பட வேண்டியது

(1) A (2) B (3) C (4) D

27. இயேசுவை அறியமாட்டேன் என்று கூறி மறுதலித்த பேதுருவின் செயலைப் போன்றதற்கு எதிரான செயல்
(1) கொலை அச்சுறுத்தல் இருந்தும் குற்றமற்ற ஒரு நண்பனைப் பாதுகாக்க முயற்சித்தல்
(2) தம்மீதும் பழிவரும் என்பதன் பொருட்டு குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு நண்பனைத் தனியாக விட்டுவிடல்
(3) பிழை செய்த ஒரு நண்பருடன் அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்துக் கொள்ளல்
(4) உமது நண்பரிடமிருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்காத நிலையில் சமுதாயத்தில் செல்வாக்குடையவரின் உதவியை நாடுதல்

28. பரிசேயரும் வரிதண்டுபவரும் கதையில் வரிதண்டுபவரின் வாழ்விலிருந்து நீர் கற்றுக்கொள்ளக்கூடியது
(1) கடவுள் முன்னிலையில் மெய்யான நிலையை உணருதல்
(2) கடவுள் முன்னிலையில் ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிடுதல்
(3) கடவுள் முன்னிலையில் பிறரின் குற்றங்களை விமர்சித்தல்
(4) ஒருவர் தன் சொந்த நிலையினை முக்கியப்படுத்துவதில் தன்னைப் பற்றிய மிதமிஞ்சி எண்ணிக்கொள்ளல்

29.

| அன்று பவுல் தனது குடியுரிமைச் சலுகையைப் பாவித்தமை ⟶ | அநீதிக்கெதிரான கருவியாகவாகும். |
|---|---|
| இன்று கிறிஸ்தவர்கள் தம் குடியுரிமைகளைப் பயன்படுத்த வேண்டியமை | A - தம் சொந்த வாழ்வைச் சிறப்பிக்கவாகும்.<br>B - தம் சொந்த நலன்களைப் பாதுகாப்பதற்காகும்.<br>C - வெளிநாடுகளில் வாழுவதற்காகும்.<br>D - தம் சொந்த நாட்டில் இறையாட்சி நிலைபெறுவதற்காகும். |

அட்டவணையின்படி மிகச் சரியான விடை

(1) A (2) B (3) C (4) D

30. சிறுவர்களின் மதிப்பையும் மாண்பையும் கூடியளவு நிறைவு செய்யக்கூடிய கிறிஸ்தவப் பொறுப்பு
(1) சிறுவரை வீட்டுப் பணியாளராகத் தொழிலில் ஈடுபடுத்துவதற்கெதிராகக் குரல் எழுப்புதல்
(2) வாழ்வின் சவால்களுக்கு முகங்கொடுப்பதிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல்
(3) பிழையான நண்பர்களிடம் சேராது விலக்கி வைத்தல்
(4) சிறுவர் துஷ்பிரயோகத்தைப் பற்றி அறிவுறுத்தி அவ்வாறான நிலையேற்படாது செயற்படுதல்

31. "அஞ்சாதே இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்" இச்சவாலை முறையாக ஏற்றுக்கொள்வதற்கு மிக உதவும் குணாதிசயங்கள்
(1) தைரியம் ⟶ ஒருவர் சுயமாகத் தீர்ப்பை எடுத்தல் ⟶ சுயமாகச் செய்து முடித்தல்
(2) திட விசுவாசம் ⟶ கீழ்ப்படிவு ⟶ சரியான செயல்
(3) புத்தி கூர்மை ⟶ பேச்சுத்திறன் ⟶ சுயமாகச் செய்து முடித்தல்
(4) தாழ்மை ⟶ கீழ்ப்படிவு ⟶ பக்கம் சார்தல்

[பக். 5 ஐப் பார்க்க

32. இறையரசின் விழுமியங்களைப் பகிர்ந்துகொள்ளல் என்பது
 (1) இலங்கையின் சூழலுக்கமைய ஒரு கிறிஸ்தவன் வாழுதல்
 (2) நவீன தொழினுட்பங்களைத் திறமையாகப் பயன்படுத்தல்
 (3) நீண்டகால ஆன்மீக எழுப்புதல் கூட்டங்களை ஒழுங்குசெய்தல்
 (4) ஒவ்வொரு மாவட்டத்திலும் சபைகளைக் கட்டியெழுப்புதல்

33. உண்மைநிலையை உதாசீனமாகக் கருதும் சமுதாயத்தில் வாழும் கிறிஸ்தவன் மனதில் கொள்ளவேண்டியது
 (1) சிலுவையண்டையில் இருந்த போர்ச் சேவகரின் கருத்தாகும்.
 (2) சிலுவையண்டையில் இருந்த மக்கள் தலைவர்களின் கருத்தாகும்.
 (3) சிலுவையண்டையில் நின்ற உரோம நூற்றுவத் தலைவரின் கருத்தாகும்.
 (4) சிலுவையில் அறையப்பட்ட இரு கள்வரின் கருத்தாகும்.

34. இலங்கையில் நீண்டகால சமாதானத்திற்காக உழைக்கும் கிறிஸ்தவர்கள்
 A - அனைத்து இலங்கையரின் சமயம், மொழி, பாரம்பரியங்கள் என்பவற்றை மதித்து நடக்க வேண்டும்.
 B - சூழலுக்கமைய மனித வாழ்க்கை முறை அமைய வேண்டும் என எதிர்பார்க்க வேண்டும்.
 C - குடும்பங்களினுள்ளே சிறந்த உறவுகளை வலுப்பெறச் செய்தல் வேண்டும்.
 D - வறியவர்களின் உரிமைக்காகப் போராட வேண்டும்.
 மிகச் சரியான விடை
 (1) A (2) B (3) C (4) D

35. "ஒரு கள்வனைப் பிடிக்க வருவதுபோல நீங்கள் வாள்களோடும் தடிகளோடும் வந்தது ஏன்" — இதனை யார் யாருக்குக் கூறினார் ?
 (1) இயேசு யூதாசுக்கு
 (2) இயேசு தலைமைக் குருக்களின் போர்ச் சேவகர்ளுக்கு
 (3) சீடர்கள் யூதாசுக்கு
 (4) சீடர்கள் தலைமைக் குருக்களின் பணியாளர்க்களுக்கு

36. அரச மகிமையுடன் இயேசு எருசலேமிற்குள் பிரவேசித்த நிகழ்வின் செய்தியின் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்துவது
 (1) மக்கள் கூட்டத்தினர் எழுப்பிய மகிழ்ச்சிப் பேரொலி
 (2) இயேசு கழுதையின்மேல் பயணம் செய்தமை
 (3) பரிசேயரின் பிரசித்தச் செயல்கள்
 (4) சீடர்கள் எதிர்பார்த்த சமாதானம்/ அமைதி

37. உண்மையான திராட்சையாகிய இயேசுவை ஒரு கிறிஸ்தவன் பற்றிப் பிடித்துக்கொள்வதற்கான காரணம்
 (1) செல்வம் கொழிக்கும் வாழ்க்கை வாழ்வதற்காகும்.
 (2) முழு உலகையும் ஒன்று சேர்த்தற்காகும்.
 (3) ஆதிக் கிறிஸ்தவர்கள் உடைமைகள் யாவற்றையும் ஒன்றாக வைத்து 'அனுபவித்ததைப்போன்று செயற்படுதவற்காகும்.
 (4) இலங்கைச் சமுதாயத்தின் விழுமியங்களை/ பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்காகும்.

38. வன்முறைகளையும் ஒடுக்குமுறைகளையும் எதிர்க்கும் கிறிஸ்தவர்கள்
 A - மனித உரிமைகளைப் பெறுவதற்கு தலைமைத்துவம் கொடுக்க வேண்டும்.
 B - வன்முறை மற்றும் ஒடுக்குமுறைகளைக் கடைப்பிடிப்போருக்கு உதிராக அமைதியான/ அகிம்சை முறைகளை உபயோகிக்க வேண்டும்.
 C - இவ்வாறான ஒடுக்கு முறைகளுக்கும் வன்முறைகளுக்குமான காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.
 D - சட்டங்களை நிலைநாட்டும் நிறுவனங்களின் மீது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.
 இவற்றுள் மிகச் சரியான விடை
 (1) A, B (2) B, C (3) C, D (4) A, D

39. மன்னிப்பைப் பற்றிய கிறிஸ்தவ செய்தியை வெளிப்படுத்துவது
 A - மன்னிப்பின் நற்செய்தியைத் துஷ்பிரயோகம் செய்து திரும்பத் திரும்ப பாவச் செயல்களில் ஈடுபடுவோரை மன்னிப்பது அவசியமற்றது.
 B - பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தனியட்டும் என்று பேதுரு கூறியமை.
 C - மன்னிப்பு அளிப்பவரின் இரக்கமும், மன்னிப்பைப் பெற்றுக்கொள்பவரின் மெய்யான மனம் வருந்துதலும் மன்னிப்பு இடம்பெறுவதற்க முக்கிய கூறுகளாகின்றன.
 D - பிழைசெய்தவர் மன்னிப்புக் கோரும்போது மட்டுமே மன்னிப்பு வழங்க வேண்டும்.
 இவற்றுள் சரியான விடை
 (1) A (2) B (3) C (4) D

40. கிறிஸ்தவர்கள் திருவிருந்து இராப்போசனத்தில் பங்குபெறுவது முக்கியமாகின்றது; ஏனெனில்
 A - அது இறையரசின் விருந்தின் முன் அனுபவமாக இருப்பதாலாகும்.
 B - அது யூதரின் பாஸ்கா விழாவின் தொடர்ச்சியாக இருப்பதாலாகும்.
 C - அது இயேசுவின் கட்டளையாக இருப்பதால் மட்டுமாகும்.
 D - அதன் மூலம் இயேசுவுடனும் நமது சகோதர மக்களுடனும் உறவுக்குள் பிரவேசிப்பதாலாகும்.
 இவற்றுள் மிகச் சரியான விடை
 (1) A, B (2) B, C (3) C, D (4) A, D

※※

[பக். 6 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2009 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2009

## கிறிஸ்தவம் II

※ முதலாம் வினாவுக்கும், மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1. இவ்வினாவிற்குக் கட்டாயமாக விடை எழுதுக.
   (i) மக்களுக்குக் கற்பிப்பதற்கு இயேசு பயன்படுத்திய இரு கற்பித்தல் முறைகள்/ சாதனங்கள் எவை ? இவற்றை அவர் பயன்படுத்திய சந்தர்ப்பங்களை உதாரணத்துடன் தருக.
   (ii) ஆதித் திருச்சபை என்னும் ஆரம்பகாலத் திருச்சபையின் நான்கு முக்கிய சிறப்பியல்புகள் யாவை ?
   (iii) மலைப் பொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ள இவ்விரு வசனங்களையும் நிறைவு செய்க.
   "உங்கள் பகைவரிடம் ......................................"
   "உங்களைத் துன்புறுத்துவோருக்காக ......................................"
   (iv) "சரியாகச் சொன்னீர்; அப்படியே செய்யும்" என்று இயேசு யாரிடம் கூறினார் ?
   "அப்படியே செய்யும்" என்பதன் மூலம் இயேசு கொடுத்த சவால் என்ன ?
   (v) "உங்கள் உடைமைகளை விற்றுத் தர்மம் செய்யுங்கள். இற்றுப்போகாத பணப்பைகளையும், விண்ணுலகில் குறைவில்லாத செல்வத்தையும் தேடிக்கொள்ளுங்கள்." இவ்வாறு தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள வார்த்தைகளின் மூலம் இயேசு, எவ்விதமான செல்வத்தைப் பற்றிக் குறிப்பிட்டார் ?
   (vi) இயேசுவுடன் கொண்டிருந்த தனிப்பட்ட உறவின் நிமித்தம் தம் வாழ்வில் முற்றான மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டதாக திருவிவிலியத்தில் குறிப்பிடப்படும் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக. இவ்வாறு நிகழ்ந்த இரு சம்பவங்களை மிகச் சுருக்கமாக விளக்குக.
   (vii) 'நல்ல ஆயர்' அல்லது 'நல்ல மேய்ப்பன்' என்னும் பழைய ஏற்பாட்டுக் கால கருத்தை ஆண்டவர் இயேசு எவ்வாறு மேலும் விரிவுபடுத்தினார் ? இதனைத் தம் வாழ்வில் எவ்வாறு காண்பித்தார் ?
   (viii) "நீ உன்னதக் கடவுளின் இறைவாக்கினர் எனப்படுவாய்." என்று யாரைப் பற்றிக் கூறப்பட்டது ?
   (ix) இன்று பிரிந்திருக்கும் திருச்சபை எருசலேம் திருச்சபை மகாநாட்டிலிருந்து (பேரவை) பெற்று, கடைப்பிடிக்கக் கூடிய வழிமுறைகள் யாவை ?
   (x) இயேசு கற்பித்த கீழுள்ள உண்மைகளை வெளிப்படுத்தும் உவமைக் கதைகள் எவை ?
   (அ) கடவுளின் வல்லமையின் நிமித்தம் இறையரசு மிக அற்புதமாக வளர்ச்சியடைகிறது.
   (ஆ) இன்றைய தடைகளை நிறைந்த உலகிலும் இறையரசு வளர்ச்சியடைகிறது.

(2 × 10 = 20 புள்ளிகள்)

2. "ஓய்வு நாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே."
   (i) ஆண்டவர் இயேசு இவ்வார்த்தைகளை ஏன் கூறினார் ? இதனை யாருக்குக் கூறினார் ?
   (ii) இயேசு மக்கள் மீது இரக்கத்துடனும் பரிவுடனும் செயற்பட்டு, மேற்கூறிய வார்த்தைகளைச் செயலில் காட்டிய நிகழ்வு ஒன்றை எழுதுக.
   (iii) உமது சக மாணவர் ஒருவருக்கோ அல்லது அயலவருக்கோ நீர் இரக்கத்துடன் செயற்பட வேண்டிமைக்கு முதலிடம் கொடுத்த நிகழ்வொன்றைக் குறிப்பிட்டு, இதனை நீர் எவ்வாறு செய்தீர் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

3. "கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன." என்று திருவிவிலியம் கூறுகின்றது.
   (i) இவ்வாறு அழகாகப் படைக்கப்பட்ட உலகைப் பாதித்துள்ள அனர்த்தங்கள் யாவை ?
   (ii) இவ்வுலகைப் பற்றிய பரந்த அறிவைக் கொண்டுள்ள மானிடர், ஏன் இவ்வாறான அனர்த்தங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் ?
   (iii) அனர்த்தங்களினால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணம் காண்பதில் மாணவராகிய உமது பங்களிப்பு எவ்வாறு அமையலாம் ?

(10 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

4. (i) ஆண் ஆதிக்கம் நிறைந்த ஒரு சமுதாயத்தில், ஆண்டவர் இயேசு பெண்களின் உரிமையை நிலைநாட்டு வதற்கென எடுத்துக்கொண்ட வழிமுறைகளுக்கான **இரண்டு** உதாரணங்கள் தருக.
(ii) இவ்விரு தருணங்களிலும் இயேசு மேற்கொண்ட சமுதாயத் தடைகளை விளக்குக.
(iii) பொதுசன ஊடக வாயிலாக நீர் அறிந்து கொண்ட பெண்கள் ஒடுக்கு முறைகளைக் கூறி, நீர் அவற்றிற்கு எதிராகச் செயற்படக்கூடிய முறைகளைப் பட்டியற்படுத்திக் காட்டுக. (10 புள்ளிகள்)

5. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கென பல தியாகங்களை மேற்கொள்ள வேண்டுமெனப் பொதுசன ஊடகங்கள் முக்கியப்படுத்திக் காண்பிக்கின்றன.
(i) தியாக சிந்தையோடு கொடுப்பதைப் பற்றி இயேசு கூறிய நிகழ்வுகளைக் குறிப்பிடுக.
(ii) உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் குறிப்பாக இடம்பெயர்ந்த சிறுவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களைப் பட்டியற்படுத்துக.
(iii) "நான் பசியாயிருந்தேன் நீங்கள் உணவு கொடுத்தீர்கள்......; அந்நியனாக இருந்தேன் என்னை ஏற்றுக் கொண்டீர்கள் ......; மிகச் சிறியோராகிய என சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்."
இவ்வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கும் கிறிஸ்தவ நிறுவனங்கள் இயேசுவின் பேரில் மக்களுக்கு எவ்வாறு பணி செய்யலாம் என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

6. நாட்டின் எதிர்கால பிரசை என்ற வகையிலும் உங்கள் பாடசாலையில் ஒரு மாணவர் என்ற முறையிலும் பல பொறுப்புகள் உங்களுக்கு வழங்கப்படலாம்.
(i) இறையரசின் பிரசையான உங்களுக்கு ஆண்டவர் இயேசுவினால் இப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கென கொடுக்கப்படும் பங்களிப்புப் பொறுப்பு என்ன?
(ii) இவ்வாறான பொறுப்பை நிறைவாகச் செய்வதற்கு ஒரு கிறிஸ்தவன் என்ற முறையில் நீர் மேற்கொள்ள வேண்டிய குறிக்கோள்கள் யாவை?
(iii) இறையரசின் பிரசை என்ற ரீதியில் உமக்கு முக்கிய பொறுப்புகள் கொடுக்கப்படும்போது நீர் எவ்வாறு செயற்படுவீர்? (10 புள்ளிகள்)

7. (i) ஆண்டவர் இயேசு தாம் வாழ்ந்த காலத்தில் மக்கள் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழ வேண்டும் என்பதற்காக அன்றைய யூத சமுதாயத்தில் பிரிவினைகளைக் கவனத்திற்கொள்ளாது விட்ட **இரண்டு** தருணங்களைக் குறிப்பிடுக.
(ii) பாரிய சமுதாயத்தில் எவ்வாறு சமாதானத்துடனும் புரிந்துணர்வுடனும் வாழவேண்டும் என்ற இயேசுவின் கருத்தை தூய பவுல் கைக்கொண்ட விதத்தை விளக்குக.
(iii) இன்று இலங்கையில் உள்ள பிரிவினைகளைக் குறிப்பிடுக. சமாதானத்துடனான சகவாழ்வை ஊக்குவிப்பதற்கு கிறிஸ்தவர்கள் நடைமுறையில் கைக்கொள்ளக்கூடிய வழிகள் எவை? (10 புள்ளிகள்)

***